தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உறுதிப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் ஏதேனும் ஒரு விபத்தைச் சந்தித்தால், உடனடியாக நிருவாகம் தொழிலாளியுடைய கவனக் குறைவே இதற்குக் காரணம் என்று கூறி, தொழிலாளர்கள்மீது பழி சுமத்தி, நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. தற்பொழுது பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டை வரவேற்பது வெறும் தொழில் வளர்ச்சிக்காக மட்டும் இருக்கக்கூடாது. மாறாக, தொழில் வளர்ந்து, தொழிலாளர்கள் வளர்ந்து, சமுதாயம் நன்மையடைய வேண்டும்.

எனவே, இந்த அரசு தொழிலாளர்கள் நலன் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்க அனுமதி வழங்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இத்தொழிலில் திருப்பரங்குன்றம் தொகுதியில் தொழிற்சாலை அமைக்க அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்கண்ட மானியத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கும், மாண்புமிகு இதய தெய்வம் கேப்டன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நான் சார்ந்துள்ள தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய அனைத்து நிருவாகிகளுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி சொல்லி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களும் நாளை (14–9–2011) புதன்கிழமையன்று பதிலுரை வழங்குவார்கள்.

7. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (14–9–2011) புதன்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

2011 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32—ஐ நாளை, (14—9—2011) புதன்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, (14—9—2011) புதன்கிழமையன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2011), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்ற (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 12-9-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.